| தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள்<br>முன்னிலை - திரு.வீ.செந்தமிழ்ச்செல்வன், | |
|---|---|
| ந.க.எண். 9302/2021/ந.1 | நாள். 07-09-2022 |

பொருள்- பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை - தஞ்சாவூர் மாவட்டம் - அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம் - துணை வட்டார வளர்ச்சி அலுவலா (தணிக்கை) ஆக பணிபுரிந்து பணியிடைகாலமான அமுதா (திருமதி) க., என்பவரது வாரிசு மற்றும் மகள் செல்வி.வீ.நிவேதா என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது - இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்.

படிக்கப் பட்டவை-

1) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) செயல்முறை ஆணை ந.க.எண். 9302/2021/ந.1 நாள். 25.01.2022.

2) அரசாணை (4ப) எண். 41, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ.6) துறை நாள். 22.08.2022.

3) தொடர்புடைய இதர ஆவணங்கள்.

------------

<u>ஆணை</u>

முதலாவதாக படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின்படி தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) ஆகப் பணிபுரிந்து 05.11.2020 அன்று பணியிடை காலமான திருமதி.க.அமுதா என்பவரது வாரிசு மற்றும் மகள் செல்வி.வீ.நிவேதா என்பவருக்கு தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் கருணை அடிப்படையில் தஞ்சாவூர் உபகோட்ட உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

2) மேலும், இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் 25.01.2022 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3) எனவே, மேற்கண்ட அரசாணையின் அடிப்படையில் தனியரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் 25.01.2022 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

4) மேற்கண்டவாறு தனியருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விபரம் தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி), தஞ்சாவூர்.

பெறுநர்
செல்வி.வீ.நிவேதா, இளநிலை உதவியாளர்,
உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) அலுவலகம், தஞ்சாவூர் உபகோட்டம். - உரிய வழியாக.
நகல்- ந.1 பிரிவு, க.1 பிரிவு மற்றும் க.3 பிரிவு இருப்புக்கோப்பிற்கு.